தமிழ்நாடு சட்டமன்றம்

சனிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 19.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Expert Committee on Unemployment

*97. Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Expert Committee on unemployment set up by the Union Government has sought the views of the State Government on this issue ; and

(*b*) if so, the details thereof ;

"வேலையின்மை" குறித்த வல்லுநர் குழு

திரு. கே. *ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :*

(அ) மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள "வேலையின்மை" குறித்த வல்லுநர் குழு, இப்பிரச்சினை குறித்து மாநில அரசின் கருத்துக்களைக் கோரியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. *செ. மாதவன் : (அ) ஆம்.*

(இ) விவர அறிக்கை @ ஒன்று மேலவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

@ 269ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.